முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1252

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.03.2023,** சனிக்கிழமை

1. அவதார ஞானியே வாழ்கவாழ்க
   அன்னதான வள்ளலே வாழ்கவாழ்க
   புவனத்தை காக்க வந்த
   பிரம்ம ஞான சொரூபனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 20 ம் நாள் 04.03.2023, சனிக்கிழமை)
   ஊழ்வென்று உலக மக்களை மீட்க
   உயர்வான எந்தன் அவதாரமாக வந்த அரங்கனே
3. அரங்கனே உன் அவதாரநோக்கம் இனிதே
   உயர்வான என் ஆசியோடு நடந்தேறக்கூடும்
   தயவாக நீ மக்களை நோக்கி காட்டுகின்ற
   தர்மம் அனைத்தும் மகா சக்தியாக உருமாறி
4. மாறியே அரங்கன் உமக்கு தக்க பாதுகாப்பும்
   மகத்துவம்பட நீ செய்ய வந்த நோக்கம்
   பேருலகம் எங்கும் பரவி
   பிரபஞ்சமே அரங்கனே கலியின் சிறந்த ஞானியென
5. ஞானியென உலகமெல்லாம் பறைசாற்றப்பட்டு
   அரங்கன் உன் திருவடிக்கு உலகமே சரணாகதி கொண்டுவந்து
   வந்துமே இந்த நல் உலகமாக வரலாறு காணாத ஞான லோகமாக
   சிந்தையில் உலகோரெல்லாம் இணைந்து உன்வழி சித்திகண்டு அரங்கன் உன் தேற்றமாக
6. ஆகவே உலகோர்க்கு ஞானிகளாக உண்டான வரம்
   ஆறுமுகன் யான் இனிதே இந்த உலகிற்கு உன் வழி தந்து
   மாறுதலை பேருலகம் எங்கும் நடத்துவேன்
   மாதவசியை வாழ்கவாழ்க என்று கூறுகின்ற
7. கூறுகின்ற மக்களெல்லாம் ஞானத்தெளிவு கண்டு
   குருபரன் அரங்கன் மூலம் சர்வசித்தியும் கண்டு
   பேருலகில் ஞானலோகம் படைக்க உண்டான
   பிரம்ம பிரணவ மகா சக்திபெற்று உயரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–